
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1179

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

157

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பெங்களூரு வி.டி.சண்முகம் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

## பெங்களூரு வி.டி.சண்முகம் ‘கலைஞர் அறிவாலயம்’ கட்டிய முன்னோடி!


ஓவியம் : ரவி பேலட்

*1956*-ஆம் ஆண்டு, பெங்களூருவில் கழகத்தின் மாநாடு. அந்த மாநாட்டில்தான், ‘மைசூர் மாநிலம்’ என்பதை ‘கர்நாடகம்’ எனப் பெயர் சூட்ட வேண்டும் எனத் தீர்மானம் கொண்டுவந்தார் பேரறிஞர் அண்ணா. கர்நாடகா மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற அந்த மாநாட்டில், பேரறிஞர் அண்ணாவின் கவனம் ஈர்த்து, பாராட்டைப் பெற்றார் 17 வயதேயான இளைஞர். அதன் பின்னர், 1958 மாநாட்டிலும் கழகத்தின் களப்பணியாளராக முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட தம்பியாக முன்நின்றார். “கழகத்தின் வளர்ச்சியே தன் உயிர் மூச்சென்று, பணியாற்றி வருபவர்” என முத்தமிழறிஞர் பெருமையுடன் குறிப்பிட்ட உடன்பிறப்பு சண்முகம். பெங்களூருவில் கழகத்துக்கு என சொந்தக் கட்டடம் அமைத்த முன்னோடி கழகக்காரர்.

அன்றைய வடஆற்காடு மாவட்டம், இன்றைய இராணிப்பேட்டை மாவட்டம், வசூர் என்கிற கிராமத்தில், 1939-ஆம் ஆண்டு பிறந்தவர் சண்முகம். பெற்றோர் திருவேங்கடம் - சாலம்மாள். சிறு வயதிலேயே தன் பெற்றோர்களுடன் பெங்களூரில் குடியேறி, அங்கு ஏழாம் வகுப்பு வரை மட்டுமே படிக்க முடிந்தது. குடும்பச் சூழ்நிலை காரணமாக, மேலும் தொடர்ந்து கல்வி பயில வாய்ப்பு இல்லாமல்போனது. ஆனால், அரசியல் பாடம் அவரைக் கைவிடவில்லை.

கழகத்தின் தொடக்கக் காலகட்டத்தில், தமிழ்நாட்டின் எல்லைகளைத் தாண்டி, அண்டை மாநிலங்களிலும் பொதுக்கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தியது; பெங்களூரு, கோலார், சித்தூர் ஆகிய இடங்களில் செல்வாக்கு செலுத்தியது; பெங்களூருவில் திராவிடர் கழகத்தில் செயல்பட்டு வந்த சண்முகம் அவர்களின் சகோதரர்கள் பின்னர், கழக அரசியலை ஏற்று தீவிரமாகச் செயல்பட்டுவந்தனர். தனது சகோதரர்கள் காட்டிய தீவிரம், வேகம், விவேகம் ஆகியவற்றைக் கவனித்து வந்த சண்முகம் அவர்களும் தனது 15 வயதிலேயே தீவிர அரசியல் பணிகளில் ஈடுபடலானார். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கவனம் ஈர்த்தவராக, முன்னோடிகளுடன் இணைந்து கர்நாடக மாநிலத்தில் கழக வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றினார்.

### சுயமரியாதைத் திருமணம்

பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் தலைவர் கலைஞர் ஆகியோரின் கருத்துகளையும் சிந்தனையையும் ஏற்றுக்கொண்ட சண்முகம், 1960-ஆம் ஆண்டுவாக்கில் பலத்த எதிர்ப்புகளுக்கு இடையே சாதி மறுப்புத் திருமணத்தைச் செய்து, கொள்கை உறுதி காட்டியவர்.

கழகத்தின் பல்வேறு போராட்டக் களங்களில் முன்நின்றவர். 1957-ஆம் ஆண்டு கருப்புக்கொடிப் போராட்டம் தொடங்கி, ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக, இரயில் மறியல் போராட்டம், சட்ட எரிப்புப் போராட்டம் எனப் பல போராட்டங்களில் ஈடுபட்டவர்.

1965-ஆம் ஆண்டு மொழிப்போர் தமிழ்நாட்டில் நடந்ததைப் போலவே, கர்நாடக மாநிலத்திலும் வீச்சாகவே நடைபெற்றது. மாணவர்கள் ஊர்வலம், உண்ணாவிரதம் எனக் கழகத்தின் போராட்டக் களத்தை வழிநடத்திச் சென்ற இளைஞராக முன்னிலையில் நின்றவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கலைஞர், 62 நாட்களுக்குப் பின் விடுதலையானபோது அவரை வரவேற்று, பெங்களூருவில் மிகப்பெரிய பொதுக்கூட்டத்தை நடத்தியது அம்மாநில கழகம். ‘கலைஞர் சிறைக்கு அஞ்சாத சிங்கம்’ எனப் பெருமைப்படுத்தும் வகையில், அவருக்கு பாய், தலையணை, தட்டு, டம்ளர் உள்பட 62 பரிசுப் பொருள்களை வழங்கிச் சிறப்பித்தனர் கழக நிர்வாகிகள். அந்த நினைவினைப் பதிவு செய்துள்ள கலைஞர்,

“கர்நாடக மாநிலத்து அன்பு உள்ளங்களின் அருமையான பரிசுப் பொருள்கள், தனிமைச் சிறையிலே உண்டான மனப்புண்ணுக்குத் தடவிய மருந்தாகவே தோன்றின, விருந்தாகவே மகிழ்வூட்டின” என்று குறிப்பிட்டதுடன், முன்னின்று நடத்திய இளைஞர்கள் என திராவிடமணி, வி.டி.சண்முகம் ஆகியோரை அடையாளப்படுத்தியுள்ளார்.

கர்நாடக மாநில அரசு, பெங்களூரு மாநகராட்சிக்கு எதிராகக் கழகத்தின் சார்பில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் உண்ணாவிரதப் போராட்டங்களில் முன்வரிசையில் நின்று நடத்தியவர். மக்களுடன் இவர் கொண்டுள்ள இணக்கம் காரணமாக, சண்முகத்தை மாநில சட்டமன்றத் தேர்தலிலும், இவரது துணைவியாரை, பெங்களூரு மாநகராட்சித் தேர்தல்களிலும் கழகத்தின் சார்பில், போட்டியிடும் வாய்ப்பை வழங்கி இருக்கிறார் கலைஞர்.

கழகத்தில் 60 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினராகவும், கிளைக் கழகச் செயலாளராகவும், தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும் செயல்பட்ட சண்முகம் அவர்களை, கர்நாடக மாநில அமைப்பாளராக, மாநில பொறுப்புக் குழுத் தலைவராக நியமித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். ‘‘அந்தப் பணிகளில் கழக வளர்ச்சிக்குக் கடுகளவும் குறை, குற்றம் ஏற்படாமல் பணியாற்றியவர்” என்று கலைஞர் பாராட்டும் வகையில் பெயர் பெற்றவர்.

கர்நாடக மாநிலத்தில், கழகத்திற்கென சொந்தமாகத் தலைமை அலுவலகம் அமைந்திட வேண்டும் என அரும்பாடுபட்டு, பெங்களூரு இராமச்சந்திராபுரம் பகுதியில் மூன்று அடுக்குமாடிக் கட்டடத்தைக் கட்டி அதற்கு ‘கலைஞரகம் என்றும், ஸ்ரீராமபுரம், சுதந்திர நகர் பகுதிக் கழகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டி, அதற்கு ‘கலைஞர் அறிவாலயம்’ என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தவர் சண்முகம்.

> “பெங்களூரு இராமச்சந்திராபுரம் பகுதியில் மூன்று அடுக்குமாடிக் கட்டடத்தைக் கட்டி, அதற்கு ‘கலைஞரகம் என்றும், ஸ்ரீராமபுரம், சுதந்திர நகர் பகுதிக் கழகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டி, அதற்கு ‘கலைஞர் அறிவாலயம்’ என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தவர் சண்முகம்.”

பெரியார், அண்ணா வழியில் தன்னலமற்று கழகப் பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அவருக்கு, 2014-ஆம் ஆண்டில் கழகத்தின் முப்பெரும் விழா விருதுகளில் ‘பெரியார் விருது’ தலைவர் கலைஞர் கரங்களால் அளித்துப் பெருமை சேர்க்கப்பட்டது. விருது நிகழ்ச்சியில் உரையாற்றிய வி.டி. சண்முகம் அவர்கள், “இந்த விருது பெற என்னை உருவாக்கிய தலைவர்களாம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மூவரும் தமிழ்நாட்டின் திசைகாட்டிகள்” என்று முழங்கினார்.

15 வயதில் தொடங்கிய அந்தக் கொள்கை முழக்கம், 2018ஆம் ஆண்டு அவர் மறையும் வரை நீடித்தது. அவரது மறைவின்போது, கழகத்தினர் பெருந்திரளாகத் திரண்டு வந்து அஞ்சலி செய்தனர். இரங்கல் அறிக்கையில், அவரைப் போற்றிய இன்றைய கழகத் தலைவர் அவர்கள், அவரது உருவப்படத்தினை நேரில் சென்று திறந்துவைத்துப் புகழஞ்சலி செய்தார்.

திராவிட அரசியல் திசைகாட்டிகள், ஆயிரம் சண்முகங்களை உருவாக்குவார்கள். அந்த வரலாற்றில் பெங்களூரு வி.டி.சண்முகம் தன்னிகரற்ற புகழோடு திகழ்வார்.

...துடிக்கும்

## நம்பிக்கை அளிக்கும் தேர்தல்!

ஒவ்வொரு தேர்தலிலும், நாம் விரும்பும் கூட்டணி வெற்றிபெற வேண்டும் என்கிற மனப்போராட்டம், 2026 தேர்தலில் நம்பிக்கையாக மாறி உள்ளது என்கிறார், மூத்த பத்திரிகையாளர் அப்பணசாமி. அவரது முகநூல் பதிவிலிருந்து...

"நாம் விரும்பும் கூட்டனி வெற்றிபெற வேண்டுமே என்ற பதற்றம், ஒவ்வொரு தேர்தலிலும் இருக்கத்தான் செய்யும். ஆனால், இந்தத் தேர்தலில் நான் எந்தப் பதற்றமும் இல்லாமல்தான் இருக்கிறேன். ஒரே பயம், பா.ஜ.க.வின் ஆட்டக்குலைப்பு நடவடிக்கைகள்தான். ஆனால் இப்போது, இன்று, இந்த நிமிடத்தில் எல்லா விதமான ஆட்டக்குலைப்புகளையும் மீறி, களம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்குச் சாதகமாகவே இருக்கிறது. காரணம் கூட்டணி பலம். ஏற்கெனவே பலமுடன் இருந்த கூட்டணியில் ம.நீ.ம., தே.மு.தி.க. ஆகிய கட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஓ.பி. எஸ் போன்றவர்கள் வருகை உள்ளது.

இவை எல்லாவற்றையும்விட, கடந்த ஐந்து ஆண்டுகளில் திராவிட மாடல் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மிகுந்த நம்பிக்கை அளிக்கின்றன. தொலைநோக்குப் பார்வையோடு கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகிய தொலைநோக்குப் பார்வையில் அமலாக்கப்படும் திட்டங்கள். இலவசம் என்று அல்லாமல் உரிமைத்தொகையாக, விடியல் பயணமாக, புதுமைப் பெண்ணாக, நான் முதல்வனாக, தமிழ்நாடு ஸ்டார்ட் அப் ஆக (பெயரில் என்ன இருக்கிறது என்று கேட்கிறது, பெயரில்தான் அரசியல் தொடங்குகிறது) புதிய தொழில்கள், முதலீடுகளின் பலன்கள் அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் வாழ்வாதாரங்களையும் கௌரவமான வகையில் நீண்டகாலம் நிலைத்திருக்கும் வகையில் தீட்டப்பட்டு, பெயருக்கு மட்டுமல்லாமல் உண்மையிலேயே பயனர்களைச் சென்று சேர்வதை உறுதிப்படுத்தி இருக்கிறது.

சொல்லப்போனால், அரிசி ரேஷன் அட்டை வைத்துள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்களை அதிகாரப்படுத்துவதையும், ஒவ்வொரு குடும்பத்திலும் உயர் கல்வி மாணவர் இருப்பதையும், ஒவ்வொரு குடும்பத்திலும் புதிய வேலைவாய்ப்பு அளிப்பதையும் இந்த அரசு உறுதிப்படுத்தி, இது அடுத்த ஆட்சியிலும் தொடரும் என்ற நம்பிக்கையைப் பொதுமக்கள் மனத்தில் ஏற்படுத்தியிருப்பதை தி.மு.க. தேர்தல் அறிக்கையில் காணமுடிகிறது. இத்தகைய நம்பிக்கை ஏற்படுத்தல் என்பது முக்கியமானது. இதுவரை எந்த ஒரு அரசும் இப்படி ஒரு நம்பிக்கையை விதைத்துத் தேர்தலை எதிர்கொண்டதில்லை" என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்




நா.கிருஷ்ணமூர்த்தி

### மதுரையில் தலைவருடன்...

1998-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராக இருந்தபோது, மதுரையில் முத்தமிழ் மன்றத்தின் சார்பில் விழா எடுக்கப்பட்டது. தலைவருடன் நீண்டகாலம் இலக்கிய ரீதியாக, நட்புறவில் இருந்த நானும் நிகழ்ச்சியில் தலைவருடன் பங்கேற்றேன். படத்தில், அன்றைய மதுரை மாவட்டச் செயலாளர் சொ.காவேரிமணியம், மதுரை கிராமிய வளர்ச்சி மையத் தலைவர் சோமசுந்தரம் எனப் பலரும் தலைவருடன் நிகழ்ச்சிக்கு வருகையில் எடுக்கப்பட்ட படம்.

**– காரைக்குடி நா.கிருஷ்ணமூர்த்தி,**
**மாநில சுயாட்சி, எல்லைப் போராட்ட வீரர்,**
**ஜெய்ஹிந்த்புரம், மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### பேரறிஞர் அண்ணா மட்டுமே...

1963-ஆம் ஆண்டில், நாடாளுமன்ற மக்களவையிலும் மாநிலங்களவையிலும் பிரிவினைத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, அரசியலமைப்புச் சட்டத்தில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள்’ அரசியல் சட்டத்தில் நம்பிக்கை உள்ளவனாகவும், அதற்குக் கட்டுப்பட்டவனாகவும் இருப்பேன் என்றும், இந்தியாவின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பேன் என உறுதிமொழி எடுத்துக்கொள்வது கொண்டுவரப்பட்டது. இந்த மசோதா மீதான விவாதத்தில், தனது கருத்துகளை அழுத்தமாக வைத்து, எதிர்த்து வாக்களித்தவர் பேரறிஞர் அண்ணா ஒருவர் மட்டுமே.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900